Minutes of the Public Hearing conducted on **30.07.2026** at 03.00 P.M. at M/s. Smart Palace, 97/1, Palayamkottai road, 3rd Mile, Opposite to Government Polytechnic College, Thoothukudi for the Proposed standalone Cement Grinding Unit namely **M/s. Arima Cements Private Limited, at S.F.No. 399/1B Part, Therku Veerapandiyapuram Village, Ottapidaram Taluk, Thoothukudi District.**

**Participants:**

| | | |
|---|---|---|
| 1. | Thiru. M. Guruchandran | District Revenue Officer, Thoothukudi. |
| 2. | Thiru. J. Hamoneth Joesun | District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Thoothukudi. |
| 3. | Project Proponents and their representatives and the general public | As per Attendance Register (A copy of the Attendance Register is attached in Annexure - II). |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Thoothukudi District welcomed the District Revenue Officer-Thoothukudi District, Government Officers, General Public, Environmental Activists, Police Officials, Press, representatives of M/s. Arima Cements Private Limited and others who gathered for the meeting on behalf of Tamil Nadu Pollution Control Board and the District Administration. He informed that the public hearing is being conducted for obtaining Environmental Clearance from the State Environmental Impact Assessment Authority for the proposed Cement Grinding Unit of M/s. Arima Cements Private Limited.

The District Environmental Engineer stated that as per the Environmental Impact Assessment Notification issued on 14.09.2006 by the Ministry of Environment, Forest and Climate Change, conducting a Public Hearing is mandatory for granting Environmental Clearance for Scheduled Projects.

He also informed that Advertisements regarding the Public Hearing were published in Tamil Newspaper 'Daily Thanthi' and English Newspaper 'The New Indian Express' on 26.06.2026. Further, DEE informed that wide publicity was made about the Public Hearing meeting through pamphlets and loud speakers in the surrounding villages. DEE informed the public that authorized EIA Consultant will make the power point Presentation regarding the Project and after that, the public can give their opinion about the project either orally or in writing. All views expressed would be recorded in audio/video format and will be submitted to the State Environmental Impact Assessment Authority with the approval of the District Administration. He requested the public to mention their name and village before viewing their opinions on the project in a peaceful manner. He requested the District Revenue Officer to preside over the Public Hearing meeting. Then, he asked the representative of M/s. Arima Cements Private Limited to give the Technical presentation on the Project.

Environmental Consultant Mr. Sekar welcomed everyone and explained the details of the Project and the Environmental Management Plan through a Power Point presentation. Further, he informed that the paper advertisements of the Public Hearing were published on 26.06.2026 in 'Daily Thanthi' and 'The New Indian Express' newspapers and the project reports available in the Tamil Nadu Pollution Control Board website. He also informed the public that wide publicity was made regarding the Public Hearing through pamphlets and loudspeakers. He requested the public to record their views about the Project.

Thereafter, the District Environmental Engineer requested the public to give their opinion about the project by providing their name and village name before proceeding.

**After this, the public expressed their views: The views expressed by the public during the Public Hearing meeting are as follows:**

**1. Thiru. Marimuthu, 3rd Mile, Thoothukudi:-**

He extended the full support to the Project. He informed that in Thoothukudi District, in an average of 18,130 student's complete higher education and become graduates every year and when they come out, they remain unemployed. He further stated that in Tamil Nadu, 53 lakh students between the age group 18-23 are becoming graduates every year and out of which 35 lakh graduates remain unemployed after completing their higher education. He opined that it is impossible for the Government to provide jobs to all of them. In Tamil Nadu, there are only 11-12 lakh government employees and it is not possible to extend employment to all of them. He mentioned that there shall be a vision of 'jobs for everyone' and it will become possible if industries established like this. He explained that biodiversity applies not only just too human but also to animals and birds. He stated that when a factory is established, the allied businesses will thrive. He highlighted that the transport/lorry business, manual labour jobs and tea stalls will emerge as biodiversity emerge. Therefore, he expressed his full support for the project. He stressed that if industries multiply, children of the people gathered here will find jobs when they complete their higher education in the future.

Keeping in mind about growth of an industry is the growth of a nation; he extended his full support to the project. He demanded that many industries should come up in the region. He concluded that government jobs cannot be provided to everyone and opportunities to work will open up only if factories like this are established.

**2. Thiru. S.P. Muthuraman, Social and Environmental Activist, Tirunelveli:-**

He stated that the accreditation of M/s. ABC Techno Labs expired on April 2, 2026 and demanded to show it if the accreditation has been renewed. He argued that if it was not renewed the public hearing meeting should not be conducted further. When he again forcefully asked to show the accreditation details, some of the public raised their voice and asked him to get down from the dais and speak from the podium mike where others speak. The District Environmental Engineer intervened and requested everyone to remain calm. The

District Environmental Engineer informed that if everyone records their opinions clearly then only their views will reach properly to the State Environmental Impact Assessment Authority. He demanded the cooperation of the public to express their opinions peacefully so as to record everything accurately and forward them to the authorities. Then, the District Environmental Engineer asked the speaker to continue.

Mr. Muthuraman further enquired the accreditation status for which the Consultant replied that the firm's accreditation had been renewed further. At this point, the District Revenue Officer intervened and informed that 'This is a public hearing meeting and not a forum to debate'. The District Revenue Officer further informed that the speakers should only record their views about the project and there should not be any question and answer session. He assured that all points raised by the public will be recorded and send to the State Environmental Impact Assessment Authority. He directed the speaker to continue accordingly. Mr. Muthuraman then stated that if the accreditation of the environmental consultant firm had expired, the consultant lacked the authority to present the EIA report at the public hearing.

Furthermore, he stated that in a biscuit packet it is clearly mentioned its manufacturing date and expiry date for consumption within that specified period. He argued that using it after the expiry date, it poses health risks and therefore it should not be used and doing so is an illegal act. He mentioned that the Ministry of Environment, Forest and Climate Change of the Government of India issued an Office Memorandum in 2022 which outlines the procedure to conduct a public hearing meeting exactly as per the EIA notification. He informed that as per the OM, if a project has to be initiated, the baseline study must be conducted for duration of three months or one season. He stated that after conducting the three-month study, they will prepare the Environmental Impact Assessment report detailing the impact on the environment and this report must be made available for public inspection before the public hearing meeting. He pointed out that the baseline study for this project was conducted during April–June 2023 and with validity period of three years, the baseline data validity period expired on June 30, 2026 and as of today; it has been exactly one month since it expired. He argued that just as an expired medicine or biscuit, it should not be used and using these expired baseline data is completely against the law.

He stated that he has the relevant Office Memorandum in his possession and that on July 7, 2026, he personally met the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Thoothukudi and requested that the public hearing meeting may be temporarily suspended. He further informed that he requested to postpone it until a fresh baseline study is conducted, a new Environmental Impact Assessment report prepared based on that study and the public hearing to be held with a valid baseline data and EIA report. He further stated that he had personally delivered a letter requesting to postpone the meeting, but no response has been received. He argued that the authorities should have consulted with higher-ranking officials and postponed the meeting, but they failed

to do so. Furthermore, he mentioned that he had sent an email regarding this issue to everyone, including the environmental consultant firm on July 22, 2026. He reiterated that continuing to conduct this meeting using expired baseline data is completely illegal. He added that when a fresh baseline study is conducted and a public hearing is held with the proper EIA report, he will return to speak about the environmental impacts to be caused by the establishment of this company. He remarked that despite his numerous warnings, the authorities went ahead with the meeting so that by just conducting the public hearing, they could claim it was held and secure the environmental clearance. Finally, by stating that the meeting should not be conducted and thus they are boycotting this illegal proceeding, he and his supporters chanted slogans demanding the meeting be stopped and walkout.

**3. Thiru. C. Muniswaran, Advocate, Thoothukudi:-**

He stated that the Terms of Reference for preparing the Environmental Impact Assessment report was issued on August 2, 2022 and were valid for a period of three years from that date until August 1, 2025. He pointed out that the baseline data collection studies to be completed within that period. He further highlighted that according to the relevant Office Memorandum, when applying for environmental clearance, if the validity of the baseline data is more than three years but less than four years, an additional seasonal study must be conducted for one season or three months during a non-monsoon period. He noted that the rules allow for such data to be revalidated and submitted for clearance. He further argued that the validity of the data is not expired. He also stated that a public hearing meeting cannot be conducted after the expiry of the baseline data period of three year period. He concluded that since the Terms of Reference had been granted one year time extension, this public hearing meeting is legally valid.

**4. Thiru. P.Kanakaraj, Kailasapuram, Thoothukudi:-**

He expressed his strong support for M/s. Arima Cements Private Limited and stated that setting up this plant would provide employment opportunities for local youth. He added that the arrival of new industries would boost the economic status and foster the growth of small businesses by providing many jobs. Thus, he wholeheartedly supports M/s. Arima Cements Company.

**5. Thiru. Petchimuthu, 3rd Mile, Thoothukudi:-**

He stated that there are approximately 1,500 taxpayers/residents in the temple under his charge, spanning areas such as Pudukkottai, Madathur, 3rd Mile, P&T Colony, Thiru.V.Ka. Nagar, Indira Nagar, and Teachers Colony. He added that if they are counted, there are nearly 4,500 people in total, out of which 200 educated youths are currently unemployed. He requested that such factories must be permitted; if factories like these exist the youth will get employment opportunities. He further mentioned that if this factory is established, sectors like transportation, spare parts and the hotel or restaurant business will grow significantly which in turn will increase cash circulation in the hands of the public. Thus, he stated that he is extending support to this factory on behalf of the residents living in places including Pudukkottai, Madathur, 3rd Mile, P&T Colony, Thiru.V.Ka. Nagar, Indira Nagar, Teachers Colony, and Kandan Colony."

**6. Tmt. Manjula, Puthiamputhur, Thoothukudi:-**

She stated that setting up of M/s. Arima Cement plant would provide employment not only to their area but also to people in all surrounding areas. She mentioned that while many people are currently running around to attend job fairs for employment, establishment of this company would greatly support the economic progress of people in the region. She further stated that general public should extend their co-operation for the establishment of this industry since setting up of this industry would not cause any health hazards and express her full consent and support for the establishment of the industry.

**7. Thiru. Mariyappan, Saminatham, Thoothukudi:-**

He expressed his heartfelt support for establishing the Arima Cements Private Limited industry. He mentioned that he felt immense pride while seeing so many people who were welcoming the project amidst those who oppose it. He expressed his concern over the unemployment among youth, economic backwardness, lagging of cement and construction industries and stated that the Environmental Department may grant permission to this project. He also stated that he was happy to see the public gathered to support this good project and informed that he welcomed M/s. Arima Cements Company.

**8. Thiru. Poolpandian, Therku Veerapandiapuram, Thoothukudi:-**

He extended his support to the project by believing that establishment of Arima Cements would provide employment to educated youth in their village and also their village will be provided with basic infrastructures. He expressed his wholehearted consent and support for setting up of this industry.

**9. Tmt. Jebakkani, Social Activist:-**

She stated that M/s. Arima Cements has achieved various milestones and is capable of providing good job opportunities to many educated youths who are struggling without employment. She emphasized that when setting up factories, the views of social activists should be recorded, and expressed her support accordingly. Furthermore, she informed that amenities like water, education, and roads shall be provided to the surrounding villages, protect the environment and requested that clearance for this project may be granted without delay.

**10. Tmt. Kavitha, Puthiamputhur, Thoothukudi:-**

She expressed her support for setting up of this company stating that it would provide lot of employment opportunities for women.

Thiru. Muneeswara Murthy, who recorded his opinions previously, again wished to record some more opinion and stated that when a factory established, allied secondary industries like transportation, tea stalls and hotels will also get established, creating job opportunities even for the uneducated people. He emphasized that everybody should feel happy for the project establishment and told that he couldnot find any reason to oppose the project.

**11. Thiru. Mahesh, 3rd Mile, Former President of Titans Rotary Club, Thoothukudi:-**

He stated that he was delighted over M/s. Arima Cements coming to their village. He concerned that nowadays many educated youth are wandering for employment in other states and countries and emphasized that more such factories must come to their district to ensure the progress of the future generations economically and for their livelihood prosperity. He stated that many such industries are there in the neighboring districts like Tirunelveli and Virudhunagar and told that we could notice the development those places into new towns during bus travels, with places like Thalaiyuthu developing into secondary urban hubs for Tirunelveli. He further stated that social activists like him are desired for establishment of more factories. He thanked M/s. Arima Cements Private Limited for choosing Thoothukudi for their industrial establishment and requested for the quick establishment of the Factory.

**12. Tmt. Ponkani, Thiraviyapuram, Thoothukudi:-**

She welcomed the project and hope for its successful development.

**13. Thiru. Mariselvam, Puthiamputhur:-**

He stated that the establishment of M/s.Arima Cements Company would be very beneficial. He indicated that there are many educated youth and expressed his belief for assured employment for everyone. He stated that they have no objection to setting up this cement plant.

**14. Tmt. Alagurathi, Thiraviyapuram, Thoothukudi:-**

She stated that they essentially need this project.

**15. The Public from Iyyanadaippu Village, Shanmugapuram, Thoothukudi:-**

He assured that he and his village are rendering full cooperation for establishing this factory.

The District Environmental Engineer requested the public to maintain peace and informed that anyone wishing to submit written representations, could do so.

**16. Thiru. M. Sudalaimani, Thiraviyapuram, Thoothukudi:-**

He extended his support for establishing the cement plant.

**17. Tmt. Muthu, Shanmugapuram, Thoothukudi:-**

She expressed her full consent for the establishment of M/s. Arima Cements Private Limited Company. She expressed her belief that all local youth would get employment and wished good things would happen for everyone.

**18. Tmt. Muthu, Shanmugapuram, Thoothukudi:-**

She assured full cooperation for the establishment of M/s. Arima Cements Private Limited and stated that she believed that it would provide job opportunities for the village residents and poor.

**19. Tmt. Akila, Shanmugapuram, Thoothukudi:-**

She stated that she and her village residents are giving their consent for the establishment of M/s. Arima Cements Private Limited Company.

**20. Tmt. Rajeswari, Thoothukudi;-**

She expressed her support for M/s. Arima Cements Private Limited. She stated that major developments in a small village would create great expectations and wished for the development of smaller villages. She intended that many people will provide with employment so that everyone will be benefited. She reiterated her support for M/s. Arima Cements.

**21. Tmt. Meena, Shanmugapuram Korамballam, Thoothukudi:-**

She stated that they all extend their support for the establishment of M/s. Arima Cements Private Limited.

**22. Tmt. Kiruba, Thoothukudi:-**

She stated that the establishment of M/s. Arima Cements Private Limited would provide employment to many people. She also stated that the people are facilitated with the establishment of a good cement plant in Thoothukudi district and she expressed her support.

**23. Thiru. Maniraj, Meelavittan, Thoothukudi:-**

He extended his full support, stating that establishment of this company would bring employment opportunities for many young people.

**24. Thiru. Eswaran, Puthiamputhur, Thoothukudi:-**

He expressed his support, stating that they believed the establishment of M/s. Arima Cements would reduce cement prices.

The District Environmental Engineer again requested the public to remain calm.

**25. Thiru. Perumal, Shanmugapuram, Thoothukudi:-**

He expressed his support under the condition of priority in employment for local youth.

**26. Thiru. Muruganandam, Saminatham, Thoothukudi:-**

He stated that he was delighted on the establishment of this cement plant and extended his support, stating that it would be beneficial if local village residents are provided with employment.

**27. Thiru. Veerakumar, Maravanmadam, Thoothukudi:-**

He welcomed the establishment of this cement plant in the area, stating that it would provide job opportunities for many young people and welcomed the project.

**28. Thiru. S.Kumar, Saminatham, Thoothukudi:-**

He stated that he has been working in Lions Club for seven years. He fully supported the project, emphasized that the establishment of M/s. Arima Cements would boost all industrial prosperity and provides employment for everyone.

The District Environmental Engineer requested the public not to repeat similar opinions and ask them to present different opinions, if any orally or in writing to avoid time delay.

**29. <u>Tmt. Bharathi, Saminatham, Thoothukudi</u>:-**

She stated that she will be happy if the educated youth are provided with employment in the company.

The District Environmental Engineer inquired if anyone else wished to express their opinions. No one preferred to come for expressing the view. He expressed his sincere thanks on behalf of the District Administration to the public for patiently registered their opinions. He further informed that all recorded views, both oral and written, along with audio/video recordings would be forwarded to the Ministry of Environment, Forest and Climate Change (MoEF&CC), Government of India through the Corporate Office TNPCB, Chennai. He again expressed his gratitude to everyone who attended this Public Hearing.

**The following documents are attached along with the public hearing proceedings:**

1. Pen drive consisting of the Recorded Video (2-Nos) of the entire public hearing proceedings (Annexure – I).
2. List of participants who attended the public hearing (Annexure – II).
3. Written views/comments received for this project (115 petitions) have been attached as (Annexure – III).

30/07/2026

District Environmental Engineer,
Tamil Nadu Pollution Control Board,
Thoothukudi.

30/7/2026

District Revenue Officer,
Thoothukudi.

**தூத்துக்குடி மாவட்டம், ஓட்டப்பிடாரம் தாலுகாவில் உள்ள தெற்கு வீரபாண்டியாபுரம் கிராமம், புல எண்: 399/1B (பகுதி)ல் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள் அரிமா சிமெண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனம் குறித்து 30.07.2026 அன்று தூத்துக்குடி மாவட்டம், பாளையங்கோட்டை ரோடு, 3வது மைல், தூத்துக்குடி அரசு பாலிடெக்னிக் கல்லூரி எதிரில் உள்ள தி/ள். ஸ்மார்ட் பேலஸ் மண்டபத்தில், பிற்பகல் 03:00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விவரங்கள்:-**

**பங்கேற்றவர்கள்:-**

| | | |
|---|---|---|
| 1. | திரு. மு. குருச்சந்திரன் | மாவட்ட வருவாய் அலுவலர்,<br>தூத்துக்குடி. |
| 2. | திரு.ஜே.ஹேமந்த் ஜோசன் | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>தூத்துக்குடி. |
| 3. | தொழிற்திட்ட உரிமையாளர்கள் மற்றும் அவரது பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் | வருகை பதிவேட்டின் படி,<br>(வருகை பதிவேட்டின் நகல் இணைக்கப்பட்டுள்ளது) இணைப்பு - II |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், தி/ள். அரிமா சிமெண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தால் உத்தேசிக்கப்பட்டுள்ள சிமெண்ட் அரவை ஆலைக்கான, பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்திற்கு வருகைபுரிந்துள்ள மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களையும், பொதுமக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், வருவாய்த்துறை மற்றும் காவல்துறை அதிகாரிகள், பத்திரிக்கைத் துறையினர், அரிமா சிமெண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தினர் மற்றும் அனைவரையும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக வரவேற்றார்.

மத்திய சுற்றுச்சூழல் வனத்துறை மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகத்திடமிருந்து சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக 14.09.2006 அன்று வெளியிடப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கையின்படி, சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்கு பொதுமக்கள் கருத்துக்கேட்பு நடைபெற வேண்டியது அவசியமாகும் என்றார்.

இக்கூட்டத்திற்கான பொது அறிவிப்பு, 26.06.2026 அன்று 'தினத்தந்தி' மற்றும் 'தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழ்களில் வெளியிடப்பட்டிருந்ததைக் கூறினார். இக்கருத்துக்கேட்பு கூட்டம் குறித்து பொதுமக்கள் தெரிந்துக்கொள்ளும் வகையில் துண்டு பிரசுரம் மற்றும் ஒலிபெருக்கி மூலமாக விளம்பரம் செய்யப்பட்டது என்றார். திட்டம் குறித்து நிறுவனத்தின் சுற்றுச்சூழல் ஆலோசகர் விவரித்த பின்பு, பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை வாய்மொழியாகவோ அல்லது எழுத்து வடிவிலாகவோ தெரிவிக்கலாம் என தெரிவித்தார். அவ்வாறு தெரிவிக்கப்படும் கருத்துக்கள் அனைத்தும் ஒலி/ஒளி பதிவுசெய்யப்பட்டு, மாவட்ட நிர்வாகம் ஒப்புதலுடன் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்றார். பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊர் தெரிவித்து இத்திட்டம் சம்பந்தமான கருத்துக்களை அமைதியான முறையில் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொண்டார். மதிப்பிற்குரிய மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களை இக்கூட்டத்திற்கு தலைமை தாங்கி நடத்தித் தருமாறு கேட்டுக்கொண்டார். அதன்பிறகு, அரிமா சிமெண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தினரை இத்திட்டம் தொடர்பான விளக்கவுரையை தருமாறுக் கேட்டுக்கொண்டார்.

அதன் தொடர்ச்சியாக அந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்ட்ட சுற்றுச்சூழல் ஆலோசகர் திரு.சேகர் திட்டம் தொடர்பாகவும் சுற்றுச்சூழல் மேலாண்மைத்திட்டம் தொடர்பாகவும் படவில்லை விளக்கக் காட்சி வாயிலாகத் தெரிவித்தார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டத்தின் விவரங்கள் ஏற்கனவே 26.06.2026 அன்று 'தினத்தந்தி' மற்றும் 'தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழ்களில் அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்ததையும் திட்ட அறிக்கைகள் தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியத்தின் இணைய தளத்தில் உள்ளதாகவும், கருத்துக்கேட்பு கூட்டம் குறித்து துண்டு பிரசுரம் மற்றும் ஒலிபெருக்கி மூலமாக விளம்பரம் செய்யப்பட்டது என்றும் தெரிவித்துக் கொண்டு, பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை பதிவிடக் கேட்டுக் கொண்டார்.

பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், பொதுமக்கள் தங்களது பெயர் மற்றும் ஊர் பெயர் தெரிவித்து பின், திட்டம் தொடர்பான தங்களது கருத்துகளை பதிவிடுமாறு கேட்டுக்கொண்டார்.

1. <u>திரு. மாரிமுத்து, 3ஆம் மைல், தூத்துக்குடி:-</u>

தி/எ். அரிமா சிமெண்ட்ஸ் பிரைவேட் லிமிட்டெட் இந்த பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு முழு ஆதரவு அளிப்பதாக கூறினார். தூத்துக்குடி மாவட்டத்தில் ஆண்டிற்கு சராசரியாக 18130 உயர்கல்வி மாணவர்கள் படித்துவிட்டு வருகிறார்கள் என்றும் இவர்கள் வெளியே வரும்பொழுது வேலைவாய்ப்பின்றி இருக்கிறார்கள் என்றும் கூறினார். தமிழ்நாட்டில் வருடத்திற்கு 53 லட்சம் பேர், 18 முதல் 23 வயது வரை படித்துவிட்டு வெளியே வருகிறார்கள் என்றும் இதில் 35 லட்சம் பேர் உயர்கல்வி முடித்துவிட்டு வேலையின்றி இருக்கிறார்கள் என்றும் கூறினார். இவர்கள் அனைவருக்கும் அரசாங்கத்தால் வேலை கொடுக்க முடிவதில்லை என்றார். தமிழ்நாட்டில் அரசு ஊழியர்கள், 11 முதல் 12 லட்சம் பேர். அனைவருக்கும் வேலை என்ற ஒரு திட்டம் இருக்கிறது என்றும் இது போன்ற தொழிற்சாலைகள் வந்தால் மட்டுமே அது சாத்தியமாகும் என்றார். பல்லுயிர் பெருக்கம் என்பது மனிதர்களுக்கு மட்டுமல்ல என்றும் விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் கூட உள்ளதாகத் தெரிவித்தார். ஒரு தொழிற்சாலை வந்தால் மட்டுமே, அது சார்ந்த தொழில்கள் வரும் என்றார். உதாரணத்திற்கு, லாரி தொழில், கூலி தொழிலாளர்கள், தேநீர் கடை போன்றவையும் வரும் என்பதால் அதுவும் பல்லுயிர் பெருக்கம் போலத்தான் என்று கூறி, இத்திட்டத்திற்கு தன் முழு ஆதரவையும் அளிப்பதாக கூறினார். இங்கு கூடி இருக்கும் மக்களின் குழந்தைகள் எதிர்காலத்தில் உயர்கல்வி முடித்துவிட்டு வரும்போது, தொழிற்சாலைகள் பெருகினால் மட்டுமே வேலை கிடைக்கும் என்றார். ஒரு தொழிற்சாலையின் வளர்ச்சியே, ஒரு நாட்டின் வளர்ச்சி என்பதை கருத்தில் கொண்டு, இந்தத் திட்டத்திற்கு தனது முழு ஆதரவையும் அளிப்பதாக கூறினார். இது போன்று நிறைய தொழிற்சாலைகள் வர வேண்டும் என்று கூறினார். அனைவருக்கும் அரசு வேலை கிடைக்காது என்றும் இது போல் தொழிற்சாலைகள் அமைந்தால் மட்டும்தான் பணியாற்றுவதற்கு வாய்ப்புகள் அமையும் என்று கூறி விடை பெற்றார்.

## 2. திரு. S.P.முத்துராமன், சுற்றுச்சூழல் ஆர்வலர், திருநெல்வேலி:-

தி/ள். ஏபிசி டெக்னோ லேப் நிறுவனத்தின் அங்கீகாரம் 02.04.2026-டன் முடிவடைந்து விட்டது என்று கூறி, அங்கீகாரம் புதுப்பிக்கப்பட்டிருந்தால் அதை காண்பிக்க வேண்டும் என்றும், இல்லையென்றால், இந்த பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தை நடத்தக்கூடாது என்றார். தி/ள். ஏபிசி டெக்னோ லேப் நிறுவனத்தின் அங்கீகாரத்தைக் காட்டக்கூறிக் கேடகும்போது, சிலர் குறுக்கிட்டு அவரை மேடையிலிருந்து கீழே இறங்கி வந்து பேசுமாறு கூறினர். இரு தரப்பினருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்ட போது, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் குறுக்கிட்டு, அவர் பேசி முடிக்கும்வரை அனைவரும் அமைதியாக இருக்கும்படிக் கேட்டுக்கொண்டார். மேலும், அனைவரும் தமது கருத்துக்களை தெளிவாக பதிவு செய்தால்தான், பொதுமக்களின் கருத்துக்கள் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு சரியாக சென்று சேரும் என்றார். பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை அமைதியான முறையில் பதிவு செய்தால்தான், மாவட்ட நிர்வாகம் அனைத்தையும் பதிவு செய்து மேலிடத்திற்கு அனுப்புவதற்கு சரியாக இருக்கும் என்று கூறி பொதுமக்களின் ஒத்துழைப்பை கேட்டுக்கொண்டார்.

பிறகு, திரு. முத்துராமன் அவர்கள் சுற்றுச்சூழல் ஆலோசகர் நிறுவனத்தின் அங்கிகாரத்தை காண்பிக்கும்படி கேட்டதால், சுற்றுச்சூழல் ஆலோசகர் நிறுவனத்தின் அங்கிகாரம் புதுப்பிக்கப்பட்டுள்ளது என்று கூறும்போது, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் குறுக்கிட்டு, இது பட்டிமன்றம் அல்ல என்றார். பேச்சாளர்கள் தங்களுடைய கருத்துக்களை பதிவிடலாம் என்றும், கேள்வி பதில் வேண்டாம் என்றார். பொதுமக்கள் கூறும் அனைத்து கருத்துக்களையும் பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பிட்டு ஆணையத்திற்கு அனுப்புவதாகக் கூறி திரு. முத்துராமன் அவர்களை தொடந்து பேசும்படி கூறினார்.

மறுபடியும் திரு. முத்துராமன் அவர்கள் நிறுவனத்தின் அங்கிகாரம் குறித்து கேள்வி எழுப்பியபோது, மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் குறுக்கிட்டு, இது கருத்துக்கேட்பு கூட்டம் என்றும் கேள்விகளுக்கு பதில் கூறும் இடம் இல்லை என்றும் கூறி, அவருடைய கருத்துக்களை மட்டும் பதிவு செய்யுமாறுக் கேட்டுக்கொண்டார்.. அப்போது திரு. முத்துராமன் அவர்கள் சுற்றுச்சூழல் ஆலோசகர் நிறுவனத்தின் அங்கிகாரம் காலாவதியாகி இருந்தால், இந்த கருத்துக்கேட்பு கூட்டத்தை நடத்துவதற்கு அவர்களுக்கு தகுதி இல்லை என்று கூறினார்.

மேலும், பிஸ்கட் பாக்கெட்டிற்கு உற்பத்தி செய்யப்பட்ட நாள் மற்றும் காலாவதியாகும் நாள் முதலியவை குறிப்பிடப்பட்டிருக்கும் என்றும் அந்த குறிப்பிட்ட காலத்திற்குள் அதை பயன்படுத்தி விட வேண்டும் என்றார். அதன் பிறகு பயன்படுத்தினால் அது உயிருக்கு ஆபத்து என்றும் அதனால் அதனை பயன்படுத்தக் கூடாது, பயன்படுத்த முடியாது, அப்படி பயன்படுத்தினால் அது சட்டத்திற்கு முரண்பான செயல் என்றார். இந்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் 2022-ல் ஒரு அலுவலக குறிப்பானை வெளியிட்டுள்ளது என்றும் அந்த சுற்றுச்சூழல் தாக்க மதிப்பிட்டு அறிவிக்கையை வெளியிட்டவர்கள் பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தை எவ்வாறு நடத்த வேண்டும் என்று வெளியிட்டுள்ளார்கள் என்றார். அதில், ஒரு திட்டத்தை ஆரம்பிக்க வேண்டும் என்றால் அதற்கு அடிப்படை ஆய்வு ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என்றும் அதற்கு மூன்று மாதம் காலம் (ஒரு பருவம்) அந்த ஆய்வை மேற்கொள்ள வேண்டும் என்றுக் கூறினார். மூன்று மாத கால ஆய்வை மேற்கொண்ட பிறகு, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பிட்டு ஆய்வறிக்கையை தயார் செய்வார்கள் என்றும் அதில் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் தாக்கம் குறித்து ஒரு அறிக்கை தயார் செய்து, அந்த

அறிக்கையை பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் நடத்துவதற்கு முன்பு அதை பார்வைக்கு வைக்க வேண்டும் என்றார். இந்த திட்டத்திற்கான அடிப்படை ஆய்வை இவர்கள் ஏப்ரல்-ஜீன் 2023-ல் மேற்கொண்டதாகவும் அதற்கான செல்லுபடியாகக்கூடிய காலம் மூன்று ஆண்டுகள் என்றார். 30.06.2026-உடன் அதனுடைய கால அவகாசம் முடிவடைந்துவிட்டது என்றும் இன்றுடன் அது காலவதியாகி ஒரு மாதம் ஆகிவிட்டது என்றார். எப்படி காலவதியான மருந்தையோ, பிஸ்கட்டையோ பயன்படுத்த முடியாதோ, அதுபோல இந்த காலாவதியான தரவுகளை பயன்படுத்துவது சட்டத்திற்கு புறம்பானது என்றார்.

இது குறித்த அலுவலக குறிப்பாணை தன்னிடம் உள்ளதாகவும், இது குறித்து 07.07.2026 அன்று தூத்துக்குடி மாவட்டத்தின் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களை நேரில் சந்தித்து, இந்த பொது மக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தை தற்போதைக்கு நிறுத்திவைக்கும் படி கூறியதாகத் தெரிவித்தார். புதிதாக ஒரு அடிப்படை ஆய்வை மேற்கொண்டு, அதன் அடிப்படையில் ஒரு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பிட்டு ஆய்வறிக்கையை தயார் செய்த பிறகு, ஒரு தகுதியான அடிப்படைய ஆய்வு மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பிட்டு ஆய்வறிக்கையுடன் பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தை நடத்துமாறும், அதுவரை இதனை நிறுத்தி வைக்கும்படியும் கேட்டுக்கொண்டதாக கூறினார். இதனை தள்ளிவைக்கும்படியானக் கடிதத்தை தான் நேரிலேயே சென்று அளித்ததாகவும், அதற்கு எந்த பதிலும் இல்லை என்றும் மேலதிகாரிகளுடன் ஆலோசித்து கூட்டத்தை தள்ளிவைத்திருக்க வேண்டும் என்றும் ஆனால் செய்யவில்லை என்று கூறினார். மேலும், இது குறித்து 22.07.2026-அன்று தான் சுற்றுச்சூழல் ஆலோசகர் நிறுவனம் உட்பட அனைவருக்கும் மின் அஞ்சல் அனுப்பியதாக கூறினார். காலாவதியான அடிப்படை ஆய்வுகளை வைத்துக்கொண்டு இந்த கூட்டத்தை நடத்தி கொண்டு இருப்பது சட்டத்திற்கு புறம்பானது என்று கூறினார். புதிதாக ஒரு அடிப்படை ஆய்வை மேற்கொண்டு அதன் அடிப்படையில் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பிட்டு ஆய்வறிக்கையுடன் பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தை நடத்தும்போது, தான் வந்து இந்த நிறுவனம் அமைவதால் உண்டாகக்கூடிய சுற்றுச்சூழல் தாக்கங்கள் குறித்து பேசுவதாக கூறினார். தான் எவ்வளவோ அறிவுறுத்தியும் கேட்காமல் எப்படியும் இந்த கூட்டத்தை நடத்திவிட்டால், பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் நடத்தப்பட்டது என்று கூறி சுற்றுச்சூழல் அனுமதி பெற்றுவிடலாம் என்று நினைப்பதாக கூறினார். இந்த கூட்டத்தை நடத்தக்கூடாது என்றும் சட்டத்திற்கு புறம்பாக நடக்கும் இந்த கூட்டத்தை தாங்கள் புறக்கணிப்பதாக கூறி அவருடன் வந்தவர்கள் கூட்டத்தை நிறுத்தும்படி ஆலை அமைவதற்கு எதிராக கோஷமிட்டுவிட்டு வெளி நடப்பு செய்தார்கள்.

<u>3. திரு. C.முனிஸ்வரன், வழக்கறிஞர், தூத்துக்குடி:-</u>

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பிட்டு ஆய்வறிக்கையை தயார் செய்வதற்கான குறிப்பு விதிமுறைகள் 02.08.2022-ல் வழங்கப்பட்டுள்ளதாகவும், அந்த தேதியிலிருந்து மூன்று வருட காலத்திற்கு அதாவது 01.08.2025 வரை செல்லுபடியாகும் என்றார். அதற்குள் அடிப்படை தரவுகளுக்கான ஆய்வுகளை முடித்திருக்க வேண்டும் என்றும் அந்த அலுவலக குறிப்பாணையின்படி, சுற்றுச்சூழல் அனுமதிக்காக விண்ணப்பிக்கும் போது அடிப்படை தரவுகள் செல்லுபடியாகக்கூடிய காலம் மூன்று ஆண்டுகளுக்கு அதிகமாகவும் நான்கு ஆண்டுகளுக்கு குறைவாகவும் இருந்தால், கூடுதலாக ஒரு பருவ காலத்திற்கு அதாவது மூன்று மாதங்களுக்கு, மழைக்காலம் அல்லாத காலங்களில் ஆய்வு மேற்கொண்டு, அந்த தரவுகள் மறுமதிப்பீடு செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படலாம் என்று விதி

இருப்பதாகக் கூறி சுட்டிக்காட்டினார். அதன்படி அந்த தரவுகளின் செல்லுபடியாகக்கூடிய காலம் இன்னும் முடிவடையவில்லை என்றும் மூன்று வருட காலம் முடிவடைந்தபிறகு மக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் நடத்தப்படக் கூடாது என்று எங்கும் சொல்லப்படவில்லை என்றார். குறிப்பு விதிமுறைகள் கால நீட்டிப்பு பெறப்பட்டு நடத்தப்படும் இந்தக் கருத்துக்கேட்பு கூட்டம் செல்லுபடியாகக்கூடியதுதான் என்றுக் கூறினார்.

**4. திரு. பி. கனகராஜ், கைலாசபுரம், தூத்துக்குடி:-**

இந்த அரிமா சிமெண்ட்ஸ் நிறுவனம் அமைந்தால், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பதால் தான் இதனை மிகவும் ஆதரிப்பதாக கூறினார். புதிய நிறுவனங்கள் வருவதால்: நமது பொருளாதார நிலை முன்னேற்றம் அடையும் என்றும் சிறு தொழில்கள் பெருகி பலருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்றார். ஆகையால், தான் இந்த அரிமா சிமெண்ட்ஸ் நிறுவனத்தை மனப்பூர்வமாக ஆதரிப்பதாகக் கூறினார்.

**5. திரு. பேச்சிமுத்து, 3ஆம் மைல் தூத்துக்குடி:-**

தான் பொறுப்பில் இருக்கும் கோவிலில், புதுக்கோட்டை, மடத்தூர், 3-மைல், பி&டி காலனி, திரு.வி.க. நகர், இந்திரா நகர், ஆசிரியர் காலனி போன்ற இடங்களை சேர்ந்த ஏறத்தாழ 1500 வரிதாரர்கள் இருந்தார்கள் என்றும் அவர்களை கணக்கிட்டால் கிட்டத்தட்ட 4500 பேர் உள்ளதாகவும், அதில் 200 பேர் படித்துவிட்டு வேலையின்றி இருக்கிறார்கள் என்று கூறி, இதுபோன்ற தொழிற்சாலைகள் இருந்தால்தான் இளைஞர்களுக்கு வேலை கிடைக்கும் என்பதால் தொழிற்சாலைகளை அனுமதிக்க வேண்டும் என்றுக் கேட்டுக்கொண்டார். மேலும், இந்த தொழிற்சாலை அமைந்தால் போக்குவரத்து, உதிரி பாகங்கள், ஹோட்டல் தொழில்கள் உள்ளிட்டவை நன்கு வளர்ச்சியடையும் என்றும் அதன்மூலம் மக்கள் கையில் பணப்புழக்கம் அதிகம் இருக்கும் என்றார். எனவே, புதுக்கோட்டை, மடத்தூர், 3-மைல், பி&டி காலனி, திரு.வி.க. நகர், இந்திரா நகர், ஆசிரியர் காலனி, கந்தன் காலனி உள்ளிட்ட இடங்களில் உள்ள மக்களின் சார்பாக இந்த தொழிற்சாலைக்கு ஆதரவு கொடுப்பதாக கூறினார்

**6. திருமதி. மஞ்சுளா, புதியம்புத்தூர்:-**

அரிமா சிமெண்ட்ஸ் நிறுவனம் அமைவதால் தங்கள் பகுதிக்கு மட்டும் அல்லாமல் சுற்றியுள்ள அனைத்து பகுதியில் உள்ளவர்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று கூறி, பலரும் வேலைவாய்ப்பு இல்லாமல் வேலைவாய்ப்பு முகாம்களுக்கு ஓடிக்கொண்டிருக்கும் நிலைமையை இந்த நிறுவனம் அமைவதால் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றார். பொருளாதார முன்னேற்றத்திற்கும் பெரிதும் உதவியாக இருக்கும் என்றும் கூறினார். இந்த நிறுவனம் அமைவதால் எந்த சுகாதாரக் கேடும் ஏற்படாது என்பதால் பொதுமக்கள் அனைவரும் நிறுவனம் அமைவதற்கு முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் என்று கூறி நிறுவனம் அமைவதற்கு தனக்கு முழு சம்மதம் என்றார்.

**7. திரு. மாரியப்பன் - சாமிநத்தம், தூத்துக்குடி:-**

இந்த அரிமா சிமைண்ட்ஸ் பிரைவெட் லிமிடெட் நிறுவனம் அமைவதற்கு தனது மனப்பூர்வமான ஆதரவை தெரிவித்துக்கொள்வதாக கூறி, இத்திட்டம் வேண்டாம் என்று சொல்பவர்களுக்கு மத்தியில் வேண்டும் என்று சொல்லும் மக்களை பார்க்கும்போது தனக்கு மிகவும் பெருமிதமாக இருப்பதாக கூறினார். ஏகப்பட்ட இளைஞர்களுடைய

வேலைவாய்ப்பு, பொருளாதாரம், பின்தங்கிய நிலையில் இருக்கும் சிமெண்ட் கட்டிடத்தொழில்கள் வேலைவாய்ப்பின்மை குறித்து கவலை இருக்கிறது என்றும் சுற்றுச்சூழல் துறை இதற்கு அனுமதி அளிக்க வேண்டும் என்றார். இந்த நல்ல திட்டத்திற்கு ஆதரவு தர பொதுமக்கள் வந்து இருப்பதை பார்த்து மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது என்று கூறி அரிமா சிமெண்ட்ஸ் நிறுவனத்தை தான் வரவேற்பதாக கூறினார்.

8. <u>திரு. பூல்பாண்டியன், தெற்கு வீரபாண்டியபுரம், தூத்துக்குடி:-</u>

இந்த அரிமா சிமைெண்ட்ஸ் நிறுவனம் அமைவதால் தங்கள் ஊரிலுள்ள படித்த இளைஞர்களுக்கு வேலை கிடைக்கும் என்றும் தங்கள் ஊருக்கு அடிப்படை வசதிகள் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இந்த நிறுவனத்தை தான் ஆதரிப்பதாக கூறினார். இந்த நிறுவனம் அமைவதற்கு தான் முழு மனதுடன் சம்மதிப்பதாகக் கூறினார்.

9. <u>திருமதி. ஜெபக்கனி, சமூக ஆர்வலர்:-</u>

இந்த அரிமா சிமெண்ட்ஸ் நிறுவனம் பல்வேறு சாதனைகளை சாதித்து மக்களுக்கு வேலைவாய்ப்பை அளித்துக்கொண்டிருக்கிறது என்றும் வேலை கிடைக்காமல் அவதிபட்டுக்கொண்டிருக்கும் எத்தனையோ படித்த இளைஞர்களுக்கு நல்ல வேலை வாய்ப்பை அளிக்கக் கூடியது இந்த நிறுவனம் என்றார். தொழிற்சாலைகள் அமைக்கும்போது, சமூக ஆர்வலர்களுடைய கருத்துக்கள் பதிவாக வேண்டும் என்பதால் தனது கருத்தை முன்வைப்பதாகக் கூறினார். மேலும், இங்கு சுற்றியுள்ள கிராமங்களுக்கு தண்ணீர், கல்வி, சாலை போன்ற வசதிகள் செய்துகொடுத்து சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படும் என்று கூறி தடையில்லாமல் அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

10. <u>திருமதி. கவிதா, புதியம்புத்தூர், தூத்துக்குடி:-</u>

இந்த நிறுவனம் அமைவதால் பெண்களுக்கு நிறைய வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பதால், இந்த நிறுவனம் அமைவதற்கு தான் ஆதரவளிப்பதாகக் கூறினார்.

திரு. முனிஸ்வர மூர்த்தி அவர்கள் மீண்டும் தான் ஒரு கருத்தைப் பதிவு செய்ய விரும்புவதாகக் கூறி, ஒரு தொழிற்சாலை வரும்போது அதைச்சார்ந்து சில துணைத்தொழில்களும் வரும் என்றும் போக்குவரத்து, தேனீர் கடைகள், ஹோட்டல்கள் போன்ற துணைத்தொழில்கள் வருவதால் படிக்காதவர்களுக்கும் வேலைவாய்ப்பு உருவாகும் என்று கூறி இந்த திட்டம் வருவதால் சந்தோஷம்தானே தவிர எதிர்ப்பதற்கான எந்த காரணமுமிருப்பதாக தனக்குத் தோன்றவில்லை என்றுக் கூறினார்.

11. <u>திரு. மகேஷ், 3-வது மைல், டைட்டன்ஸ் ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவர், தூத்துக்குடி:-</u>

அரிமா சிமெண்ட்ஸ் தொழிற்சாலை தங்களது ஊருக்கு வருவது மிக்க மகிழ்ச்சி என்று கூறினார். இன்று பல படித்த இளைஞர்கள் வெளிநாடுகளிலும், வெளிமாநிலங்களிலும் பணிதேடி வருவதாகவும், வருங்கால சந்ததியினர் மேன்மேலும் பொருளாதாரத்திலும் வாழ்வாதாரத்திலும் முன்னேற வேண்டுமென்றால் இதே போன்ற தொழிற்சாலைகள் நிறைய தமது மாவட்டத்தில் வரவேண்டும் என்று கூறினார். தமது அண்டை மாவட்டங்களான திருநெல்வேலி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் இதே போன்ற தொழிற்சாலைகள் இருக்கின்றன என்றார்.

அந்த இடங்களை பேருந்தில் கடக்கும்போது பார்த்தால் புதிய நகரங்களாக வளர்ந்துள்ளன என்றும் தாழையூத்து போன்ற இடங்கள் திருநெல்வேலிக்கு அடுத்த

இரண்டாம் நிலை நகரமாக வளர்ந்துள்ளது என்றார். அதேபோல மேலும் பல தொழிற்சாலைகள் வரவேண்டும் என்பதுதான் தன்னைப்போன்ற சமூக ஆர்வலர்களின் விருப்பம் என்றார். அரிமா சிமெண்ட்ஸ் பிரைவெட் லிமிடெட் நிறுவனம் தூத்துக்குடியை தேர்வு செய்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்வதாகக் கூறினார். இந்த தொழிற்சாலையை விரைவில் தொடங்கவேண்டும் என்று கோரிக்கை வைப்பதாகக் கூறினார்.

12. திருமதி. பொன்கனி, திரவியபுரம், தூத்துக்குடி:-

தான் இந்த திட்டத்தை வரவேற்பதாகக் கூறி, இந்த திட்டம் நல்லபடியாக வளரவேண்டுமென்று கேட்டுக்கொள்வதாகக் கூறினார்.

13. திரு. மாரிசெல்வம், புதியம்புத்தூர்:-

இந்த அரிமா சிமெண்ட்ஸ் நிறுவனம் வந்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்று கூறினார். படித்த இளைஞர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள் என்றும் அனைவருக்கும் வேலை உறுதிசெய்யப்படும் என்று நினைப்பதாகக் கூறினார். இந்த சிமெண்ட் தொழிற்சாலை வருவதற்கு, தாங்கள் எதுவும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்று கூறினார்.

14. திருமதி. அழகுரதி, திரவியபுரம்:-

இந்த திட்டம் தங்களுக்கு முக்கியமாக வேண்டும் என்று கூறினார்.

15. அய்யனடைப்பு கிராமம், சண்முகபுரம், தூத்துக்குடியை சார்ந்தவர்:-

இந்த தொழிற்சாலை அமைவதற்கு தானும் தனது கிராமம் முழு ஒத்துழைப்பு கொடுப்பதாகக் கூறினார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் பொதுமக்களை அமைதி காக்கும்படி கேட்டுக்கொண்டு, யாரேனும் எழுத்துபூர்வமான மனுக்கள் வைத்திருந்தால் கொடுக்கலாம் என்று கூறினார்.

16. திரு. மு.சுடலைமணி, திரவியபுரம், தூத்துக்குடி:-

இந்த சிமெண்ட் நிறுவனம் அமைப்பதற்கு தான் ஆதரவளிப்பதாகக் கூறினார்.

17. திருமதி. முத்து, சண்முகபுரம், தூத்துக்குடி:-

அரிமா சிமெண்ட்ஸ் பிரைவெட் லிமிடெட் நிறுவனம் வருவதில் தனக்கு முழு சம்மதம் என்று கூறினார். இங்குள்ள அனைத்து இளைஞர்களுக்கும் வேலை கிடைக்கும் என்றும் எல்லோருக்கும் நல்லது நடக்கும் என்று நினைப்பதாகக் கூறினார்.

18. திருமதி. முத்து, சண்முகபுரம், தூத்துக்குடி:-

அரிமா சிமெண்ட்ஸ் பிரைவெட் லிமிடெட் நிறுவனம் வருவதற்கு தாங்கள் முழு ஒத்துழைப்பு கொடுப்போம் என்று கூறினார். கிராம மக்களுக்கும் ஏழை மக்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று நம்புவதாகக் கூறினார்.

19. திருமதி. அகிலா, சண்முகபுரம், தூத்துக்குடி:-

அரிமா சிமெண்ட்ஸ் பிரைவெட் லிமிடெட் நிறுவனம் வருவதற்கு தானும் தனது ஊர் மக்களும் சம்மதம் தெரிவிப்பதாகக் கூறினார்.

**20. திருமதி. ராஜேஸ்வரி, தூத்துக்குடி:-**

அரிமா சிமெண்ட்ஸ் பிரைவெட் லிமிடெட் நிறுவனத்திற்கு தான் ஆதரவு தெரிவிப்பதாகக் கூறினார். ஒரு சிறிய கிராமத்தில் பெரிய வளர்ச்சி ஏற்படுவதைப் பார்க்கும்போது நிறைய எதிர்பார்ப்புகள் இருக்கும் என்றார். சின்னச் சின்ன கிராமங்களை இதுபோல் பெரிதாக்கிக் கொண்டுவரவேண்டும் என்றார். நிறைய பேருக்கு வேலை கொடுக்கவேண்டுமென்றும், அதனால் அனைவரும் பயனடைவார்கள் என்று நினைப்பதாகவும் கூறினார். அரிமா சிமெண்ட்ஸ் நிறுவனத்திற்கு தான் ஆதரவு தெரிவிப்பதாகக் கூறினார்.

**21. திருமதி. மீனா, சண்முகபுரம் கோரம்பள்ளம், தூத்துக்குடி:-**

அரிமா சிமெண்ட்ஸ் பிரைவெட் லிமிடெட் நிறுவனம் வருவதற்கு தாங்கள் அனைவரும் ஆதரவு தெரிவிப்பதாகக் கூறினார்.

**22. திருமதி. கிருபா, தூத்துக்குடி:-**

அரிமா சிமெண்ட்ஸ் பிரைவெட் லிமிடெட் நிறுவனம் வந்தால் நிறைய பேருக்கு வேலை கிடைக்கும் என்றார். தூத்துக்குடி மாவட்டத்தில் ஒரு நல்ல சிமெண்ட் தொழிற்சாலை அமைவதற்கு பொதுமக்கள் கொடுத்துவைத்திருப்பதாகக் கூறி ஆதரவு தெரிவிப்பதாகக் கூறினார்.

**23. திரு. மணிராஜ், மீளவிட்டான், தூத்துக்குடி:-**

இந்நிறுவனம் வருவதால் நிறைய இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று கூறி முழு ஆதரவளிப்பதாகக் கூறினார்.

**24. திரு. ஈஸ்வரன், புதியம்புத்தூர், தூத்துக்குடி:-**

இந்த அரிமா சிமெண்ட்ஸ் நிறுவனம் வந்தால் சிமெண்ட் விலை குறையும் என்று நினைப்பதாகக் கூறி, தான் ஆதரவு தருவதாகக் கூறினார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் பொதுமக்களை அமைதியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டார்.

**25. திரு. பெருமாள், சண்முகபுரம்:-**

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு முன்னுரிமை தருவதற்காக தான் ஆதரவு கொடுப்பதாகக் கூறினார்.

**26. திரு. முருகானந்தம், சாமிநத்தம்:-**

இந்த சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிப்பதில் தனக்கு சந்தோஷம் என்றும் இதனால் தங்கள் கிராமத்தில் இருப்பவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்தால் நன்றாக இருக்கும் என்றும் கூறி ஆதரவு தெரிவிப்பதாகக் கூறினார்.

**27. திரு. வீரக்குமார், மறவன்மடம், தூத்துக்குடி:-**

இந்த சிமெண்ட் தொழிற்சாலை இந்தப் பகுதியில் வருவதை தான் வரவேற்பதாகக் கூறினார். இந்த ஆலை வந்தால் நிறைய இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பதால் இத்திட்டத்தை வரவேற்பதாகக் கூறினார்.

**28. திரு. பாரதி, சாமிநத்தம்:-**

தான் அரிமா இயக்கத்தில் ஏழு ஆண்டுகளாக பணியாற்றி வருவதாகக் கூறினார். அரிமா சிமெண்ட் நிறுவனம் வந்தால், அனைத்து தொழில்வளமும் பெருகும், எல்லோருக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பதால் தான் முழுமையாக ஆதரிப்பதாகக் கூறினார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் பொதுமக்களிடம் ஒரே மாதிரியான கருத்துக்களை திரும்பத்திரும்ப சொல்லவேண்டாம் என்று கூறி வேறு ஏதேனும் கருத்துக்கள் இருந்தால், அவையின் முன்பு வந்து தெரிவிக்கலாம் என்றும், அதேநேரம் எழுத்துபூர்வமாக கருத்துக்கள் இருப்பின் அதையும் தங்களிடம் கொண்டுவந்து தரலாம் என்றும் கூறி காலவிரையத்தை தவிர்க்குமாறு கேட்டுக்கொண்டார்.

**29. திருமதி. செல்வி, பி&டி, காலனி, தூத்துக்குடி:-**

படித்த பிள்ளைகளுக்கு நிறுவனத்தில் வேலைவாய்ப்பு கொடுத்தால் மிகவும் சந்தோஷம் என்று கூறினார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் வேறு யாரேனும் கருத்துக்கள் தெரிவிக்கவேண்டியுள்ளதா என்று வினவினார். இறுதியாக, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், தூத்துக்குடி அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் அனைத்தும் உள்ளது உள்ளபடியே எழுத்துபூர்வமாகவும், ஒலி-ஒளி தகடு மூலமாகவும் பதிவு செய்யப்பட்டு, தலைமை அலுவலகம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சென்னை மூலமாக மாநில சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்திற்கு (MoEF&CC) அனுப்பி வைக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக் கொண்டார். இந்த பொது மக்கள் கருத்து கேட்புக் கூட்டத்திற்கு வருகை தந்திருந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

**பொது மக்கள் கருத்துக்கேட்புக் கூட்ட நடவடிக்கையுடன் கீழ்க்கண்ட ஆவணங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.**

1. பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கைகள் பதிவு செய்யப்பட்ட காணொலி அடங்கிய குறும்பதிவு (எண்ணம்-2) இணைப்பு I-ல் இணைக்கப்பட்டுள்ளது.
2. பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தில் பங்கேற்றவர்கள் பற்றிய விபரம் இணைப்பு II-ல் இணைக்கப்பட்டுள்ளது.
3. இந்த திட்டம் அமைவதை தொடர்பாக எழுத்து பூர்வமாக பெறப்பட்ட மனுக்கள் மொத்தம் (எண்ணம்-115) இணைப்பு III-ல் இணைக்கப்பட்டுள்ளது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
தூத்துக்குடி.

மாவட்ட வருவாய் அலுவலர்,
தூத்துக்குடி.